புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 - வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# செல்லாத பணம் காட்டும் வாழ்வியல்

*பு. சத்தியா,*
*பகுதி நேர ஆய்வியல் நிறைஞர்*
*சண்முகா தொழிற்சாலை கலை மற்றும் அறிவியல் கல்லூரி,*
*திருவண்ணாமலை, தமிழ்நாடு, இந்தியா.*

*ஆய்வுச்சுருக்கம்*

*செல்லாத பணம் என்ற நாவல் குடும்ப உறவின் மேன்மைகளையும், சிக்கல்களையும், படம் பிடித்து காட்டுகின்றன. அத்துடன் உறவுகளின் அன்பு நிலையையும், மனித நேயத்தையும் சித்தரிக்கின்றன. நிலையாமை என்பது உலகியல் வாழ்வு நிலையில்லாதது என்பதை குறிக்கும் சொல் ஆகும். ஆகையால் ஒவ்வொரு மனிதனும் தான் வாழும் நாட்களின் உன்னதத்தை உணர்ந்து மனித உறவுகளுக்கு மதிப்பளித்து பொறாமை, பொய் கூறுதல் போன்ற எந்த தீய பழக்கங்களும் இல்லாமல் இனிய பண்பாளனாகவும், மற்றவர்களுக்கு உதவும் நல்லுள்ளங் கொண்டவராகவும் வாழ்வதே சிறந்த வாழ்க்கை முறையாகும். ரேவதி தீ குளித்ததை அறிந்த அவள் குடும்பத்தார் தன்னிடமுள்ள அனைத்து செல்வங்களையும் கொடுத்து அவளை காப்பாற்ற முயற்சித்தனர். ஆனால் அப்பொழுது அந்த செல்வங்களால் ரேவதியின் உயிரை காப்பாற்ற முடியவில்லை. காலம் கடந்து செய்யும் எந்த செயலும் பயனளிக்காது. ரேவதி உயிரோடு இருக்கும் போது கொடுத்திருந்தால் அவளுக்கு அந்த பணம் பயன்பாடு இருக்கும். ரேவதி குடும்பத்தார் வாழ்வின் நிலையாமையை உணராமல் இருந்து விட்டதை இந்நாவல் நமக்கு எடுத்துரைக்கிறது.*

*முன்னுரை:-*

*உலகிலுள்ள உயிரினங்களுள் மனிதப்பிறவி தனித்தன்மை உடையது. ஏனென்றால் மனிதனுக்கு தான் பகுத்றியும் அறிவு உண்டு. இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு குழந்தையும் தன் தாய், தந்தையின் சொல்லை கேட்டு எவ்வித சுணக்கமும் இன்றி கல்வி கற்று, நல்ல ஒழுக்கத்துடன் வளர்ந்து, வாழ்வின் நிலையாமையை உணர்ந்து உலகிலுள்ள உயிர்களுக்கு மதிப்பு அளித்து வாழ்வது தான் நல்ல ஒழுக்கமான வாழ்க்கை முறையாகும். உலக பொதுமறையான திருக்குறளில் நம் வள்ளுவர் ஒழுக்கமுடைமை என்னும் அதிகாரத்தில்*

*"குறள் ஒழுக்கம் விழுப்பம் தரலாண் ஒழுக்கம்*
*உயிரிணும் ஓப்பப் படும்".*

*பொருள் : ஒழுக்கம் ஒருவருக்கு மேன்மையைத் தரும். அந்த ஒழுக்கமே உயிரினும் மேலானதாகப் போற்றப்படுகிறது. செல்லாத பணம் என்ற நாவலில் ரேவதி என்ற பெண் உயர்ந்த குடியில் பறந்திருந்தாலும் ஒழுக்கம் தவறியதால் அவளுடைய வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களையும், துன்பங்களையும் அனுபவிக்கிறாள் இறுதியாக தன் உயிரையும் மாய்த்து கொள்கிறாள். ஒழுக்கசீர்கேட்டின் வெறிப்பாட்டை இந்நாவல் எடுத்துரைக்கிறது என நான் கருதுகிறேன்.*

*தந்தையின் மேம்பட்ட குணநலன்கள்*

*நல்லறமாவது இல்லறமே என்ற திரு.வி.க வின் வைரவரிகள் இல்லறத்தின் மாண்பினை உணர்த்தும். இல்லற இன்பத்தில் மகிழ்வுற்ற தாய், தந்தையர் அன்பில் பிறக்கும் ஆரமுதம் குழந்தை*

"பெரிது பெரிது பிள்ளைப்பேறு
பிள்ளைப் பேற்றால் உள்ளம் வளரும்".

நம் தெய்வப்புலவர் திருக்குறளில் மக்கட்பேறு எனும் அதிகாரத்தில்
"பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற".

பொருள் : பெறுகின்ற செல்வங்களுள் ஒருவன் அறிவுடைய மக்களைப் பெறவதைக் காட்டிலும் சிறந்ததாகப் பிற எதையும் நாம் கருதுவதில்லை.

அத்தகைய மக்கட் செல்வத்தை பெறுவது மட்டுமல்லால், அவர்களுக்கு சிறந்த ஒழுக்க நெறிகளையும், அறக்கருத்துகளையும் கூறி வளர்க்க வேண்டும். செல்லாத பணம் என்ற நாவலில் வரும் நடேசன் என்பவர் தன் இரு பிள்ளைகளையும் ஒழுக்கத்துடன் தான் வளர்த்தார்.

நம் முன்னோர்கள் பலரும் சொல்லிய வண்ணம் செயல்படுவதையே வாழ்வின் குறிக்கோளாக கொண்டருந்னர். அவருடைய மகன் முருகன் தந்தையின் மனம் கோணாமல் வாழ்வின் உயர்ந்த நிலையை அடைந்து வாழ்ந்து வந்தான். அவருடைய மகள் ரேவதி தன்னுடைய வாழ்க்கைத் துணையை தானே தேர்ந்தெடுத்து, ஒழுக்கநெறி தவறி வாழ்வில் உயர்நிலையை அடைய தவறிவிட்டாள். அதனால் அவளுடைய வாழ்வு சீரழிந்தது.

தம் மகளின் இச்செயலால் மன உளச்சலுக்கு ஆளானார். தான் கொண்ட அளவற்ற பாசத்தால் மகளின் முடிவினை எதிர்க்க முடியவில்லை. அவளுடைய பிடிவாதமான திருமணத்திற்கு பின் அவள் படும்பாட்டை எண்ணி மிகவும் மனமுடைந்தார்.

சகோதரத்துவத்தின் இன்றியமையாமை

அண்ணன், தங்கை உறவு என்பது அப்பா, மகள் உறவை போன்றது. தாய், தந்தை காலத்திற்கு பிறகும் கடைசி காலம் வரை செல்ல மகளாக வாழும் பாக்கியம் அண்ணனை பெற்ற தங்கைகளுக்கு மட்டுமே சாத்தியம் என்ற வரிகளுக்கு ஏற்புடையவனாக திகழ்பவன் "செல்லாத பணம்" என் நாவலில் வரும் முருகன்.

முருகன் தன் தங்கை தேவதி மேல் அளவற்ற பாசம் கொண்டவன். அவளுடைய மகிழ்வுக்கு எதையும் செய்ய துணிந்த பாசமான அண்ணனாக திழ்ந்தான். அவள் தீக்குளித்த செய்தியை கேட்டதும் அணலிலிட்ட புழு போல் துடிதுடித்து போனான். எவ்வளவு பணம் செலவானாலும் ரேவதியை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்துடன் இருந்தவன்.

நட்பின் சிறப்பு

நாம் ஒருமுறை ஒருவரோடு நட்பு கொண்டால் அவர்களை விட்டு பிரிதல் என்பது கூடாது. நட்பில்லா மனிதன் என்றால் அவனொரு மனிதன் இல்லை. நட்புக்கே உயிரைத் தந்தால் அவனைப் போன்று புனிதன் இல்லை. வழி தவறும் போது அன்புடன் இடிந்துரைத்து ஒருவரை நல்வழிக்கு கொண்டு செல்வதே நல்ல நட்புக்கு இலக்கணமாகும். திருக்குறளில் நட்பு என்னும் அதிகாரத்தில்

"நகுதல் பொருட்டு அன்று நட்டல் மிகுதிக்கண்
மேல்சென்று இடித்தல் பொருட்டு".

பொருள் : ஒருவரோடு ஒருவர் நட்புச் செய்வது தம்முள் கூடிப் பேசி சிரித்து மகிழ்வதற்கு அன்று. நண்பர் வரம்பு கடந்து ஒழுகுவாராயின் அவரை கண்டித்து அறிவுரை கூறித் திருத்துவதற்கேயாகும். இத்திருக்குறளுக்கு ஏற்றப்படி நட்புக் கொண்டவள் செல்லாத பணத்தில் வரும் அருண்மொழி.

இன்றைய காலக்கட்டத்தில் பெண்களின் ஒழுக்க நெறிகள்

"மண்ணிற்குப் புகழ்சேர்க்க மாதேவன் பெண்படைத்தான்
இவ்வுலகிற் குறிரளித்த ஏந்தல்களின் சரிதத்தைச்
செவ்வையாகச் சிந்தித்தால் சாதனைகள் அத்தனைக்கும்
அவ்வியனாயிருந்த தன்னைத்தான் ஆண் மகனும்

அவ்வைக்குள் அடக்கந்தான் அரங்குரா வழிகாட்ட''

மேற்சொன்ன வரிகள் பெண்களுக்கு எக்காலத்திற்கும் பொருந்தும்.

இன்னறயப் பெண்களின் கல்வித் தகுதி உயர்ந்து கொண்டே வருகிறது. பெண் கல்விக்கு அதிக முக்கியத்துவம் இன்று கொடுக்கப்படுகிறது. பெண்கள் கல்வியறிவை பெற்றிருந்தாலும் ஒழுக்கத்தை மீறிய செயல்களில் ஈடுபடும் போது அவர்களது வாழ்வு சீரழியும் நிலை ஏற்படுகிறது ''செல்லாத பணம்'' என்ற நாவலில் ரேவதி என்ற பெண் நல்ல கல்வியறிவு பெற்றிருந்தும் குமர பருவத்தில் ஏற்படக்கூடிய தடுமாற்றத்தால் அவளது மனம் போன போக்கில் வாழ்க்கை துணையை தேர்ந்தெடுக்கிறாள். பெற்றோரின் சொல்லுக்கு மதிப்பு கொடுக்காமல் தன்னுடைய பிடிவாத குணத்தால் தனக்கு பொறுத்தமற்ற வாழ்கை துணையை தேர்ந்தெடுக்கிறாள்.

ஒழுக்கமின்மையால் விளைந்த விளைவுகள்

ஒழுக்கமுடைமை என்னும் அதிகாரத்தில் நம் வள்ளுவர்

''அழுக்காறு உடையான்கண் ஆக்கம் போன்று இல்லை
ஒழுக்கம் இலாண்கன் உயர்வு''.

பொறாமை உடையவனிடத்தில் செல்வம் நில்லாதது போல, ஒழுக்கம் கெட்டவனிடத்தில் உயர்வாகிய பெருமை நில்லாது. செல்லாத பணம் என்ற நாவலில் ரேவதி என்ற பெண் நல்ல கல்வியறிவு பெற்றிருந்தாலும், ஒழுக்கத்தை கடைபிடிக்காததாலும், தம் பெற்றோரின் பேச்சை கேட்காகததாலும், அவளுடைய வாழ்வு பண்பட்டதாக அமையவில்லை.

தினம் தோறும் அவளுடைய கணவனுடன் வாக்குவாதம், சண்டை அவளுடைய உரிமைகளான புத்தகம் படிக்கும் பழக்கம் கூட மறுக்கப்படுகிறது. வேலைக்கு போக வேண்டும் என்ற ஆசை மறுக்கப்பபடுதல், அவளுடைய அடிப்படை உரிமைகள் யாவும் மறுக்கப்படுகின்றன. மாறாக கணவனின் வசைப் பேச்சுகளும், அடி, உதைகளையும் பெற்று தீராத மன உளைச்சலுக்கு ஆளாகின்றாள். அவளுடைய ஒழுக்கம் தவறிய செயலாலும், கணவனின் செயல்களாலும் ரேவதி தன் உயிரை மாய்த்துக் கொள்கிறாள் என்பதை இந்நாவல் நமக்கு தெள்ளத் தெளிவாக சித்தரிக்கிறது.

பிள்ளைகளின் பிழைகளை பெற்றோர் பொறுத்தருளுதல்

தன் பிள்ளை தவறான வழியில் சென்றால் அதை ஆரம்பத்திலேயே கண்டறிந்து நல்வழிப்படுத்த வேண்டியது பெற்றோரின் முதல் கடமை. தன் பிள்ளைகளின் ஒழுக்கமற்ற செயல்களால் அவர்களின் வாழ்க்கை பாதிப்பை கண்டு மன சோர்வடையாமல் அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்து பாதுகாத்திடல் அவசியம். இந்நாவலில் ரேவதி என்ற பெண் பெற்றோரின் பேச்சை கேட்காமல் ரவி என்ற ஆட்டோ ஓட்டும் ஒருவனை திருமணம் செய்கிறாள். அதனால் அவளுடைய நிறைவுடையதாக இல்லை. அவளுக்கு நிறைய பிரச்சனைகள் ஏற்படுகிறது.

தன் தாய் இடம் அவள் வெளிப்படையாக எந்த பிரச்சனையும் சொல்லவில்லை. இருப்பினும் ரேவதியின் தாய் அமராவதி, ரேவதிக்கு ஏற்படும் பணத்தட்டுப்பாட்டை உணர்ந்து அவளுக்கு உதவி செய்து கொண்டிருந்தாள்.

இன்றைய இளைஞர்களின் பொறுப்பற்ற வாழ்க்கை முறை

இன்றைய இளைஞர்களிடம் உயர்ந்த இலட்சியங்களை குறிக்கோள்கள் இல்லை. அற்ப ஆசைகளுக்குப் பின்னால் போட்டி போட்டுக் கொண்டு வாழ்வின் உண்மையை அறிந்து கொள்ள தவறுகிறார்கள். வாழ்க்கையை வளப்படும் அறிய செயல்களை செய்வதில் ஆர்வம் காட்டுவதில்லை. இத்தகைய செயல்களால் பல குடும்பங்கள் கடுமையான இன்னல்களுக்கு ஆட்படுகிறது. இந்நாவலில் வரும் ரேவதி என்பவளின் கணவர் ரவி பொறுப்பற்ற இளைஞனாக இருப்பதால் தான் ரேவதி மன உளச்சலுக்கு ஆளாகி தன் இன்னுயிரை மாய்த்து கொள்கிறாள். இளைஞர்களின் பொறுப்பற்ற வாழ்க்கை முறையால் எத்தனையோ குடும்பங்களில் பெண்கள் தன் வாழ்வை முடித்து கொள்கின்றனர். பெண்கள் தன் வாழ்வை முடித்து கொள்கின்றனர். ஆகையால் சமுதாயத்தில் ஆண் பிள்ளைகளை பொறுப்புடன் வளர்க்க வேண்டியது ஒவ்வொரு

பெற்றோரின் கடமையாகும். இதை இந்நாவல் தெளிந்த நீரோடை போல் நமக்கு எடுத்துரைக்கிறது.

பணம் செல்லாமல் போகும் இடம்

வாழ்க்கை நிலையில்லாதது, செல்வம் நிலையில்லாதது. வாழ்வின் நிலையாமையை உணர்ந்து பெற்றோர் இன்றைய காலகட்டத்தில் தம் பிள்ளைகள் செய்யும் தவறுகளை பொறுத்தருளுதல்.

செல்லாத பணம் என்ற நாவலில் ரேவதியின் திருமணம் பெற்றோர்க்கு ஏற்புடையதாக இல்லை. ஆகையால் அவளுடைய அப்பாவும், அண்ணனும் அவளுடன் பேசுவதை நிறுத்துகிறார்கள். அந்த நேரத்தில் அவள் மேல் கொண்ட பாசம் சிறிதளவும் குறையவில்லை. அவள் தீக்குளித்த பின் ஜிப்மர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அவளது தந்தையும், அண்ணனும் எவ்வளவு பணம் செலவானாலும் சரி ரேவதியை உயிருடன் வீட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்பதில் இருவரும் உறுதியாக இருந்தார்கள்.

ரேவதி உயிருடன் இருக்கும் போதே அவளுடைய அப்பாவும், அண்ணனும் அந்த பணத்தை கொடுத்திருந்தால் அவளுடைய குடும்பமும் பொருளாதாரத்தில் உயர்வு பெற்றிருக்கும். அவளுக்கும் அவன் கணவனுக்கும் இடையே சண்டை ஏற்பட்டிருக்காது. அப்படி செய்யாமல் அவள் உயிருக்கு போராடும் நிலையில் எத்தனை லட்சம் வேண்டுமானாலும் செலவு செய்ய தயாராக இருப்பது பெற்றோர்க்கு உயர்ந்த பண்பாகாது.

வாழ்வின் நிலையாமையை உயர்ந்து குழந்தைகள் போல் வளர்ந்த பிள்ளைகளையும் பாதுகாப்பது ஒவ்வொரு பெற்றோரின் கடமையாகும். இந்நாவலில் பணம் செல்லாமல் போகும் தருணத்தை நாவல் ஆசிரியர் தெளிவாக கூறியுள்ளார்.

முடிவுரை:-

இனிவரும் காலங்களில் நம் பிள்ளைகளை நல்ல மனிதர்களாக வளர்த்து, நல்லொழுக்கம் கற்பித்து, ஒழுக்கத்துடன் வாழ்ந்தால் தான் வாழ்வு உயர்வு பெறும் என்பதை குழந்தைகளுக்கு புரிய வைத்து வளர்ப்பது ஒவ்வொரு பெற்றோரின் தலையாய கடமையாகும்.

செல்லாத பணம் என்ற நாவலில் நல்ல ஒழுக்கமான குடும்பத்தில் பிறந்த ஒரு பெண் நல்ல கல்வியறிவு பெற்றிருந்தாலும், வளர் இளம் பருவத்தில் ஏற்படக்கூடிய மன மாற்றத்தால் அவள் பெற்றோரின் பேச்சை கேட்காமல் தன் வாழ்க்கை துணையை தானே தேர்ந்தெடுத்து, அதனால் அவள் படும் துன்பத்தையும், இன்னல்களையும் நம் கண்முன்னே காட்சிபடுத்துகிறது. அந்த பெண்ணின் ஒழுக்கம் மீறிய செயலால் அவளுடைய குடும்பத்திலுள்ளோர் அனைவரின் நிம்மதியும் பறிபோயிற்று. அதனோடு நில்லாமல் அவள் தன் இன்னுயிரையும் துறக்கிறாள். இந்நாவலின் மூலம் இன்றைய இளைய சமுதாயத்தினர் ஒழுக்கம் மீறிய செயல்களை செய்யக்கூடாது என்பதை புரிந்து பெற்றோர் சொற்படி நடந்து தன் வாழ்க்கை துணையை அமைத்து கொள்வதே சிறந்ததாகும்.

துணை நூல்கள்

1. போதனா (பாலை) - நற்றிணை
2. பொன்முடியார் - புறநானூறு
3. விளம்பிநாகனார் - நாண்மணிக்கடிகை
4. டாக்டர். வ.சு.ப. மாணிக்கனார் - திருக்குறள்

********* ********* ********** ********* ********* ********** ********** **********